ந.க.எண் 222/2021

பேரூராட்சி அலுவலகம் ,
மூலைக்கரைப்பட்டி ,
நாள் 12.04.2022

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் 2021-22 நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பணியை செய்ய இப்பேரூராட்சியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து 28.04.2022வியாழக் கிழமை அன்று பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் வரவேற்கப்படுகிறது .

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தபுள்ளி நமுனா 27.04.2022 புதன் கிழமை அன்று பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். அல்லது www.tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம்.
2. ஒப்பந்தபுள்ளிகள் 28.04.2022 வியாழக் கிழமை அன்று பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.
3. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் 28.04.2022 பிற்பகல் 3.30 மணிக்கு ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
4. ஒப்பந்தபுள்ளி பெறவிரும்புவோர் அதில் குறிப்பிட்டுள்ள தொகையை டேவணி தொகையாக செலுத்தி ரசீது ஒப்பந்தபுள்ளிகளுடன் இணைத்து அனுப்பவேண்டும்.
5. குறித்த காலத்திற்கு பின்வரும் ஒப்பந்தபுள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
6. டெண்டர் பேரூராட்சி தனி அதிகாரியின் அங்கீகாரத்திற்குட்பட்டது.
7. பேரூராட்சி மன்ற ஒப்பந்தபுள்ளிகளின் படி நடந்து கொள்வேன் என உறுதி கூறி ரூ 50 மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்த உடன்படிக்கை எழுதிக் கொடுக்க வேண்டும்.
8. ஒப்பந்தபுள்ளிகளின் விலைகள் அடித்தல் திருத்தல் இன்றி எழுதப்பட வேண்டும்.
9. ஒப்பந்தபுள்ளிதாரர் நிபந்தனைகளுக்குட்பட்டு நடக்க தவறினால் உடனடியாக ஒப்பந்தபுள்ளிகள் ரத்து செய்யப்பட்டு மறுஒப்பந்தபுள்ளி கோர செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
10. மேற்கண்டவாறு மறு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் ஏற்படும் நிதி இழப்பிற்கு முந்தைய ஒப்பந்தகாரரே பொறுப்பாவார்.
11. ஒப்பந்த காலத்தில் அலுவலக நிர்வாக காரணங்களால் எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தபுள்ளிகள் ரத்து செய்யப்படும். அவ்வாறு நிகழ்கையில் எவ்வித நஷ்டஈடும் பேரூராட்சியில் கோர ஒப்பந்தகாரருக்கு உரிமை கிடையாது.
12. எவ்வித நேரத்திலும் ஒப்பந்தபுள்ளி தேதியை மாற்றவோ ரத்து செய்யவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
13. செலுத்திய டேவணி தொகையானது ஒப்பந்த காலத்திற்கு பின் தணிக்கை முடிந்த பின்பு வட்டியின்றி திரும்ப கொடுக்கப்படும்.
14. மேற்கண்ட நிபந்தனைகளில் ஏதேனும் நீக்கவோ , சேர்க்கவோ எந்த நேரத்திலும் செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
15. இதர விபரங்கள் தேவை எனில் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
16. டெண்டர் டேவணி தொகை 1% டெண்டரின் போது ரொக்கமாக செலுத்த வேண்டும். மீதம் 5% பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

# வேலையின் விபரம்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வேலையின் விபரம் | மதிப்பீடு (லட்சத்தில்) | டேவணி தொகை (ரூ) | ஒப்பந்த புள்ளி நமுனா கிரையம் (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1 | நமக்கு நாமே திட்டம் 2021–2022 | மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி 1வது வார்டு சின்னமூலக்கரையில் 1 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள சம்ப் , பம்ப் ரூம் அமைத்து பைப்லைன் விஸ்தரிப்பு செய்து குடிநீர் விநியோகம் செய்தல் | 20.00 | 20000 | 6800 |

## சிறப்பு நிபந்தனைகள்

1. ஒப்பந்ததாரர்கள், சேவை வரி பதிவு எண் பெற்றவராகவும்,வருமான வரி பதிவு எண் பெற்றவராகவும் இருக்க வேண்டும். இனி பதிவு எண் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் அதன் விபரம் தெரிவித்திருக்க வேண்டும். இனி பெறுவதில் பிரச்சனை ஏற்படுமானால் அதற்கு இப்பேரூராட்சி பொறுப்பு ஆகாது.

2. திட்ட நிதி ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டுள்ளதின் பேரில் வேலைகள் எடுக்கப்பட்டுள்ளதால், நிதி வரப் பெறுவதற்கு ஏற்ப வேலைத் தொகை முழுவதுமாகவோ, பகுதிகளாகவோ வழங்கப்படும்.

3. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிப்பதற்கு முன்னரும், பணி நடைபெறும் போதும் மற்றும் பணி முடிந்த பின்னரும் புகைப்படம் எடுக்க வேண்டும். எடுக்கப்படும் புகைப்படங்கள் ஒரே இடத்தைக் காட்டும்படியாக இருத்தல் வேண்டும். எடுக்கப்படும் புகைப்படங்கள் இவ்வலுவலகத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

செயல் அலுவலர் ,
பேரூராட்சி அலுவலகம்,
மூலைக்கரைப்பட்டி

**பெறுநர்:**

1. பேரூராட்சியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள்
2. ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பேரூராட்சிகள்
3. திருநெல்வேலி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி தனிஅதிகாரி அவர்களின் தகவலுக்கு.
5. கிராம நிர்வாக அலுவலகம் மூலைக்கரைப்பட்டி
   விளம்பர பலகைக்கு.